[17th March 1958

தொகையை வாபஸ் பெறுங்கள், ரோடு இப்போது போட முடியாது என்று சொல்லியிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அப்படி தகவல் இல்லை.

Pattukkottai-Vadagudi Road

* 347-H *Q.*—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) when the work of laying the new road between Pattukkotttai and Vadagudi *via* Vandakkottai was taken up for execution; and

(*b*) the present stage of the work?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) The work was taken up for execution in the current year.

(*b*) The work is in good progress.

SRI A. R. MARIMUTHU : இந்த வேலை ஆரம்பத்திற்கு எடுத்துக்கொண்டு ஐந்து வருடங்கள் ஆகிறது. 1952-ல் ஆரம்பித்த வேலை இதுவரை சிறு சிறு பகுதிகளாக நடந்துவருவதினால் இதுவரை பூர்த்தியாகாமல் இருந்து வருகிறது. இந்த காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதைப்பற்றி என்னிடம் இருக்கின்ற தகவலின்படி 1957-ம் ஆகஸ்ட் 31-ம் தேதி உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. 1957-1958-ல் இந்த வேலை பூர்த்தியாகிவிடும் என்று தெரிகிறது.

SRI R. SRINIVASA IYER : ஏற்கெனவே இந்த ரோடு பூர்த்தி செய்யப்படாததற்கு காரணம் நடுவிலுள்ளவர்கள் நிலம் கொடுக்காமல் இருந்ததினால்தான். இப்போது அது நிவர்த்திக்கப்பட்டுவிட்டது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதை சரியானபடி கவனித்து சீக்கிரமாகவே புதுபாதை போடப்படும்.

SRI A. R. MARIMUTHU: தலைவர் அவர்களே, ஹைவேஸ் எஞ்சினியர் அவர்களிடத்தில் கேட்டதற்கு காண்ட்ராக்டர் சரியானபடி வேலை செய்யாததினால்தான் காலதாமதத்திற்கு காரணம் என்று கூறுகிறார்கள். ஆகவே அதன் பேரில் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. அப்படி ஏதாவது தகவல் இருந்தால் அதற்கு வேண்டிய முறையில் நடவடிக்கை எடுக்கலாம்.

Bridge across Agniyar

9-40 a.m. * 347-I *Q.*—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any mahazars recently that a bridge should be constructed across Agniyar in Sethu Road in the Pattukkottai taluk, Tanjore district; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir.

(*b*) The work of constructing a causeway across the Agniyar at M. 12/3 of Muthupet-Mimisal Road is included in the Second Five-Year Plan.

17th March 1958]

Sri R. SRINIVASA IYER : There is another such road between Pattkukottai and Sethuvachatram. I think there was a proposal to construct a bridge across the Agniyar. Is there any such proposal?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : A separate question may be put.

Sri A. R. MARIMUTHU : *கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது சேது ரோடு என்பதை எல்லா ரோடுகளையும் சேது ரோடு என்று சொல்கிறார்கள். இப்போது பாலம் கட்டப்படவேண்டுமென்று கருதுவது எந்த சேது ரோடில் ?*

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : *நீங்கள் எதைப் பற்றி இப்போது விசாரித்தீர்களோ, அந்த ரோடைப்பற்றித் தான்.*

Village Officers

* 347-A *Q.*—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Works be pleased to state the action taken by the Director of Harijan Welfare, Madras, on resolution No. 4 regarding the construction of houses free of cost for the Harijan village officers passed at the Public Meeting of the Coimbatore District Village Officers, on 14th November 1955?

The Hon. Sri P. KAKKAN : Resolution No. 4 passed at a Public Meeting of the Coimbatore District Village Officers on 14th November 1955 has not been received by the Director of Harijan Welfare.

Sri P. G. MANICKAM : *ஹரிஜன கிராம உத்தியோகஸ்தர்கள் என்று அழைக்கப்படும் வெட்டியார்கள், தலையாரிகள் ஆகியவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தரவேண்டுமென்று மந்திரி சபை உப கமிட்டியார் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.* 1947-*ம் வருஷத்திலே ஹரிஜன நிதியிலிருந்து தனி பண்ட் ஒதுக்காததால் காரியம் நடைபெறவில்லை. நடப்பு வருஷத்திலே ஹரிஜனங்களுக்கு வீடு கட்ட* 15 *லட்சத்து* 9 *ஆயிரம் ரூபாய் நிதியிலிருந்து தனியாக ஒதுக்கித் திட்டம் வகுக்க கவர்ன்மெண்டார் பரிசீலிக்க முன் வருவார்களா ?*

Mr. SPEAKER : *இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. மூலக் கேள்வி கோயம்புத்தூரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப்பற்றியது. அது வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்.*

Sri P. G. MANICKAM : *சபாநாயகர் அவர்களே, ஹரிஜன நல இலாகா டைரக்டர் அவர்களுக்கு இந்தத் தீர்மானம் அனுப்பப்பட்டிருக்கிறது என்று எனக்கு செக்ரட்டரி அவர்களிடமிருந்து பதில் கிடைத்திருக்கிறது இதற்கு முன்பு போடப்பட்ட கேள்வியிலிருந்து. தீர்மானம் அனுப்பப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.*

The Hon. Sri P. KAKKAN : *கனம் சபாநாயகர் அவர்களே, டைரக்டர் அவர்களுக்கு அனுப்பிய தீர்மானம் வரவில்லை என்றுதான் என்னிடம் உள்ள தகவல் இருக்கிறது. அந்த நகலை இப்போது அனுப்பினாலும் அது கவனிக்கப்படும்.*

Sri S. NAGARAJA MONIGAR : *இப்போது ஹரிஜனங்களுக்கோ அல்லது ஹரிஜன கிராம அதிகாரிகளுக்கோ கட்டப்படும் வீடுகள் . . .*

Mr. SPEAKER : *இந்த ஸப்ளிமென்டரி கேள்விக்கும் முதல் கேள்விக்கும் சம்பந்தமில்லை. மனு வந்திருக்கிறதா என்பது கேள்வி; வீடு கட்டிக் கொடுப்பதைப்பற்றிக் கேட்க முடியாது.*